**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 10.5.2012**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மைக்கு அடுத்தபடியாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவதிலும், நாட்டின் ஏற்றுமதி வருவாயை பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது நெசவுத் தொழில். இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலான நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கு எனது அரசு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 30.3.2012 அன்று மின் கட்டண விகித மாற்றம் குறித்த தனது ஆணையை வெளியிட்ட போது, அதில் விவசாயிகள், விசைத்தறி நெசவாளர்கள், வீட்டு மின் பயனீட்டாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு 3,554 கோடியே 16 லட்சம் ரூபாய் அளவுக்கு கட்டணச் சலுகையை எனது தலைமையிலான அரசு வழங்கியிருந்தது. மேலும், 740 கோடி ரூபாய்க்கான மானியத்தையும் இந்த மாமன்றத்திலே நான் அறிவித்தேன்.

இந்தக் கட்டணச் சலுகையின்படி, விசைத்தறி நெசவாளர்கள் தற்போது இரு மாதங்களுக்கு பயன்படுத்தும் முதல் 500 யூனிட்டுகளுக்கு கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. 500 யூனிட்களுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்கள் 501 யூனிட்டுகளிலிருந்து, ஒரு யூனிட்டுக்கு 4 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். அதாவது, முதல் 500 யூனிட் வரை விசைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு யூனிட்டிற்கு 4 ரூபாய் 50 காசு என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கட்டணம் நிர்ணயித்திருந்த போதிலும், அந்த கட்டணத்தை அரசே ஏற்று, அவர்களுக்கு கட்டணமில்லாச் சலுகை வழங்கப்பட்டது. 500 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரத்தை பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்களுக்கு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு யூனிட்டிற்கு 5 ரூபாய் என்று கட்டணம் விதித்திருந்த போதிலும், ஒரு யூனிட்டிற்கு ஒரு ரூபாய் மானியத்தை அரசு வழங்கி வருகிறது. அதாவது, அவர்களிடமிருந்து 1 யூனிட்டிற்கு 4 ரூபாய் மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, இந்த ஆண்டு விசைத்தறி நெசவாளர்களுக்கு மானியம் வழங்கும் வகையில் 153 கோடியே 15 லட்சம் ரூபாயை எனது அரசு ஒதுக்கீடு செய்தது.

எனினும், தற்போது செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணம் உயர் அளவாக உள்ளது என்றும், அது குறைக்கப்பட வேண்டும் என்றும் விசைத்தறி நெசவாளர்கள் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். இதனை வலியுறுத்தி கடந்த சில நாட்களாக வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். விசைத்தறி நெசவாளர்களின் இந்த கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்த எனது அரசு, அவர்களுக்கு கூடுதல் சலுகைகளை வழங்க தற்போது முடிவு எடுத்துள்ளது.

1. இதன்படி, இரு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்களுக்கான கட்டணமில்லாச் சலுகை தொடரும். இதனால் 69,476 விசைத்தறி மின் நுகர்வோர் பயனடைவர்.

2. இரு மாதங்களுக்கு 501 முதல் 1000 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் உபயோகிப்பாளர்கள் தற்போதுள்ள கட்டணமான 4 ரூபாய்க்கு பதிலாக யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் மட்டும் செலுத்தினால் போதும். அதாவது, அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் ஒரு ரூபாயுடன், கூடுதலாக யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் மானியம் வழங்கப்படும். இதன் மூலம் 24,171 விசைத்தறி மின்நுகர்வோர் பயனடைவார்கள்.

3. இரு மாதங்களுக்கு 1001 முதல் 1500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் உபயோகிப்பாளர்கள் தற்போதுள்ள கட்டணமான 4 ரூபாய்க்கு பதிலாக யூனிட் ஒன்றிற்கு

3 ரூபாய் மட்டுமே செலுத்தினால் போதும். அதாவது, அவர்களுக்கு ஏற்கெனவே யூனிட் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வரும் ஒரு ரூபாய் மானியத்துடன், கூடுதலாக ஒரு ரூபாய் மானியத்தை அரசு வழங்கும். இதன் மூலம் 9,297 விசைத்தறி மின்நுகர்வோர் பயனடைவார்கள்.

4. இரு மாதங்களில் 1500 யூனிட்டுகளுக்கும் அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்தும் 28,056 நெசவாளர்கள், தற்போது அனுபவித்து வரும் ஒரு ரூபாய் மானியத்தை தொடர்ந்து பெறுவார்கள். மேலும், முதல் 500 யூனிட்டுகள் கட்டணம் ஏதுமின்றியும், 501 முதல் 1500 யூனிட்டுகள் வரை உள்ள பயன்பாட்டிற்கான சலுகைகளையும் பெறுவார்கள்.

5. இந்த சலுகைகளின் காரணமாக, 47 கோடியே 5 லட்சம் ரூபாயை கூடுதல் மானியமாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தமிழக அரசு வழங்கும்.

6. இதுமட்டுமன்றி நிலையான கட்டணமாக மாதம் ஒன்றிக்கு கிலோ வாட் ஒன்றுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் நிர்ணயித்த கட்டணமான 50 ரூபாய் என்பது 30 ரூபாயாக குறைக்கப்படும். இதற்காக அரசு 12 கோடியே 64 லட்சம் ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக வழங்கும்.

என்னால் தற்போது அறிவிக்கப்பட்ட இந்த சலுகைகளின் காரணமாக, விசைத்தறி பயனீட்டாளர்களுக்கான மானியத் தொகை ஆண்டொன்றுக்கு 153 கோடியே 15 லட்சம் ரூபாயிலிருந்து 212 கோடியே 84 லட்சம் ரூபாயாக அதிகரிக்கும். இந்த அதிகரிக்கப்பட்ட மானியத் தொகையான 59 கோடியே 69 லட்சம் ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது அரசு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சலுகைகள் மூலம் இந்தத் தொழிலை நம்பியுள்ள நெசவாளர்கள் நலம் பெற்று வளமான வாழ்வு பெறுவார்கள் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******